# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: டி.அிரொளா.அயடேடிஉ.யட @tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 1020/2016/பே

ஆணை எண். 227/2017/நாள் 12–09–2017

திரு அசோக் குமார்,
த/பெ கிருஷ்ணன் நாயர்,
மகம், ராமவர்மன்சிறை,
ராமவர்மன்சிறை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்–629 152 — முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பளுகல் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். — எதிர் மனுதாரர்

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், மகம்–ராமவர்மன்சிறை கிராமத்தைச் சேர்ந்த திரு அசோக்குமார், த/பெ கிருஷ்ணன் நாயர் என்பவரின் 20.09.2016 ம் நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 03.10.2016 அன்று பெறப்பட்டு 1020/16 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு அசோக்குமார், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் பேரூராட்சியில், ராமவர்மன்சிறை–சூரங்குழி சாலையில் 2014 ம் ஆண்டு மேற்படி சாலை பகுதியில் (1 ) கோமதி வீடு முதல் பிரசன்னன் வீடு வரை ரூ 4.00 லட்சம் மதிப்பீட்டிலும் , (2) பிரசன்னன் வீடு முதல் அசோகன் வீடு வரை ரூ 4.00 லட்சம் மதிப்பீட்டிலும், (3) மணி வீடு முதல் அனி வீடு வரை ரூ 8.00 லட்சத்திலும் பிரித்து சாலை அமைக்க திரு மணிகண்டன், ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டதாகவும், ரூ 8.00 லட்சம் மதிப்பீட்டிலான சாலைப்பணி மட்டும் இன்னும் முற்றுப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரே சாலையினை அரசு விதிமுறைகளின்படி செயல்படாமல் பிரித்து வழங்கியதின் மூலம்

ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிகளை பேரூராட்சி நிர்வாகம் மீறியுள்ளதாகவும், பணிகளை எடுத்த ஒப்பந்தக்காரர் பேரூராட்சி நிர்வாகத்தால் அறிவிப்பு வழங்கிய பின்னரும் பணியினை முடிக்காமல் பொது மக்களுக்கு இன்னல்களை ஏற்படுத்தி வருவதாகவும், குறிப்பாக மழைக்காலங்களில் இச்சாலைகளில் பயணிப்பதால் பொதுமக்களுக்கு பெரும் சேதம் விளைவதாகவும் இந்நிகழ்விற்கு காரணமான பேரூராட்சி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரப்பட்டுள்ளது.

முறையிட்டு மனுதாரரின் புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி பளுகல் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 1020/2016/பே/நாள் 05.10.2016 ன் மூலம் ஆணையிடப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலர், பளுகல் தனது கடித எண் 120/2016/அ.1/நாள்:24.10.2016ல் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

பளுகல் பேரூராட்சி தீர்மான எண் 204(19) நாள் 30.10.2013ன்படி பொது நிதி திட்டத்தின் கீழ் 2014-15 ம் ஆண்டில் ரூ 4.00 லட்சம் மதிப்பீட்டில் பளுகல் பேரூராட்சிக்குட்பட்ட இராமவர்மன்சிறை-சூரங்குழி சாலையில் கோமதி வீடு முதல் பிரசன்னன் வீடு வரை தார்தளம் அமைக்க தீர்மானிக்கப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். மேற்படி மதிப்பீடு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக செயற்பொறியாளர் தொழில் நுட்ப அனுமதி எண் 536/2014-15 நாள் 18.08.2014 ன் படி பெறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்த விளம்பரம், செயல் அலுவலரின் கடித எண் 107/2014/அ1/நாள் 29.09.2014 ன் மூலம் அனுப்பப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டு, அதற்கான ஒப்புநோக்கு படிவம் தயாரிக்கப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்தக்காரர் திரு மணிகண்டன் என்பவரின் ஒப்பந்த புள்ளி பேரூராட்சி மன்றத் தீர்மான எண் 281 (5)/நாள் 14.11.2014ன்படி அனுமதிக்கப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலரின் ஆணை எண் 107/2014/அ.1/நாள் 14.11.2014 ன்படி 120 நாட்களில் பணி முடிக்கும் வண்ணம் பணி ஆணை வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மேலும் பளுகல் பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண் 204 (20)/நாள் 30.10.2013ன்படி இராமவர்மன்சிறை-சூரங்குழி சாலையில் பிரசன்னன் வீடு முதல் அசோகன் வீடு வரை ரூ 4.00 லட்சம் மதிப்பீட்டில் தார்தளம் அமைக்க தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து, இதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக செயற்பொறியாளர் எண் 537/2014-15 நாள் 18.08.2014ன்படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, பேரூராட்சிகளில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்த விளம்பரம் கடித எண் 107/2014/அ.1/நாள் 29.09.2014ன்படி அனுப்பப்பட்டதாக தெரிவித்துள்ளார். பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு படிவம் தயாரிக்கப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்தக்காரர் திரு மணிகண்டன் என்பவரின் ஒப்பந்த புள்ளியினை பேரூராட்சி மன்ற தீர்மான எண் 281 (6)/நாள் 14.11.2014 ன்படி அங்கீகரித்து செயல் அலுவலரின் கடித எண் 107/2014/அ.1/நாள் 1411.2014 ன் மூலம் 120 நாட்களில் பணியினை முடிக்கும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணி ஆணை வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

பளுகல் பேரூராட்சியில் இராமவர்மன்சிற-சூரங்குழி சாலையில் 2015-16 ம் ஆண்டில் மணி வீடு முதல் அனி வீடு வரை ரூ 8.00 லட்சம் மதிப்பீட்டில் தார் தளம் அமைக்கும் பணிக்கு பேரூராட்சி மன்ற தீர்மான எண் 225/நாள் 24.01.2014 ன்படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு,

பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நிர்வாக அனுமதி மூ.மு.எண். 7436/2015/நாள் 07.01.2016ன் மூலம் பெறப்பட்டு, பேரூராட்சி உதவி இயக்குநரக, உதவி செயற்பொறியாளர், அனுமதி எண் 1873/2015-16 நாள் 07.01.2016 ன் மூலம் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்த புள்ளிகள் மாவட்ட ஒப்பந்த புள்ளி மலர் 16 இதழ் 14/நாள் 14.01.2016 மற்றும் தின முரசு பத்திரிக்கை விளம்பரம் நாள் 10.01.2016 ன் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டும், பேரூராட்சியில் பதிவு செய்யப்பட்ட அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும் தபால் மூலம் ஒப்பந்தபுள்ளி அனுப்பப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்கு படிவம் தயாரிக்கப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்தக்காரர் திரு மணிகண்டன் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை பேரூராட்சி மன்ற தீர்மான எண் 5 (33) நாள் 08.02.2016 ன்படி அனுமதித்து பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண் 72/2015/அ.1/நாள் 08.02.2016 ன்படி 180 நாட்களில் பணியினை முடிக்கும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணி ஆணை வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மேலும் பேரூராட்சி செயல் அலுவலர், பளுகல் அவர்கள் தனது கடிதத்தில் இராமவர்மன்சிறை-சூரங்குழி சாலையில் (1) கோமதி வீடு முதல் பிரசன்னன் வீடு வரை ரூ 4.00 லட்சம் தார் தளம் அமைக்கும் பணி (2) பிரசன்னன் வீடு முதல் மணி வீடு வரை ரூ 4.00 லட்சம் மதிப்பீட்டில் தார் தளம் அமைக்கும் பணிகளுக்கு 14.11.2014 ல் பணி ஆணைவழங்கப்பட்ட 120 நாட்களுக்குள் பணி முடிக்கப்படவேண்டும் என நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட்ட நிலையில், மேற்படி ஒப்பந்தக்காரர் திரு மணிகண்டன், பணி ஒப்பந்த விதிகளின்படி முடிக்கும் நாளான 14.03.2015 வரை மேற்படி பணிகளை முடிக்காத நிலையில், பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் 107/2014/அ.1/நாள் 14.03.2015 ல் ஒப்பந்தக்காரருக்கு பணிகளை முடிக்காமமைக்கான காரணம் கேட்டும் உடன் பணியினை துவக்கி முடிக்க அறிவிப்பு வழங்கியதாக தெரிவித்துள்ளார். செயல் அலுவலரின் அறிவிப்பிற்கு ஒப்பந்தக்காரர் திரு மணிகண்டன் தனது 20.03.2015 ம் தேதிய கடிதத்தில் தனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் உரிய காலத்தில் பணியினை செய்ய இயலவில்லை எனவும், மேற்படி பணிகளை 12.08.2016 க்குள் ஒப்பந்த மதிப்பீட்டின் அடிப்படையிலேயே செய்து முடிப்பதாக தெரிவித்ததாகவும், மேற்படி பணிகளை துவக்கும்போது உள்ளூரில் ஏற்பட்ட தடை காரணமாக திரு எட்வின் ஜோஸ், செயல் அலுவலர் மேற்படி பேரூராட்சியில் பணி புரிந்து மாற்றலாகி செல்லும்போது மேற்படி சாலைகள் Water Bound Macdam வரை (தார்ச்சாலை பணிக்கு முந்தைய நிலை) முடிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

அதற்கு பின்னர் இப்பேரூராட்சியில் கூடுதல் பொறுப்பு வகித்த திரு நீ . ராஜாமணி செயல் அலுவலர் தனது கடித எண் 120/2016/அ.1/நாள் 05.05.2017 ல் மேற்படி இரு பணிகளும் 01.12.2016 ல் துவங்கப்பட்டு 09.01.2017 ல் முடிக்கப்பட்டதாகவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளரின் பட்டியல் நாள் 12.01.2017 ன்படி மேற்படி ஒப்பந்தக்காரர் திரு மணிகண்டன் என்பவருக்கு வழங்கப்பட்ட மூன்று பணிகளுக்கும் மதிப்பீட்டுத் தொகையில் தலா 5% அபராதம் விதிக்க கோரியதைத் தொடர்ந்து அபராதம் விதிக்கப்பட்டு, இரு பணிகளுக்கு அபராதத் தொகை பிடித்தம் செய்யப்பட்டதாகவும் மணி வீடு முதல் அனி வீடு வரை தார்தளம் அமைக்கும் பணிக்கான பட்டியல் தொகை வழங்கப்படாததால் அபராதத் தொகை பிடித்தம் செய்யப்படவில்லை என தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 1020/2016/பே/நாள் 22.11.2016 மற்றும் 09.12.2016ன்படி முறையீட்டு மனுதாரரின் நேரடி வாக்குமூலம் பெற 25.01.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டது.

25.01.2017 அன்று முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் நேரில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

...... 29.09.2016ம் தேதிய முறையீட்டு மனு தன்னால் கொடுக்கப்பட்டதாகவும், பளுகல் பேரூராட்சியில் ராமவர்மன்சிறை–சூரங்குழி ரோடு ஒப்பந்தக்காரருக்கு 14.11.2014 ல் ஆணைவழங்கப்பட்டதாகவும், மண் குவிக்கப்பட்டு போக்குவரத்திற்கு தடையாக இருந்ததாக தெரிவித்துள்ளார். மேலும் அதே பணியினை மீண்டும் அதே ஒப்பந்தக்காரருக்கு 2015 ல் வழங்கப்பட்டதாகவும், மீண்டும் மண் பரப்பப்பட்டு பொது மக்களுக்கு பெருத்த அசௌகர்யங்கள் ஏற்பட்டதாக தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார். 2016 ம் ஆண்டில் மீண்டும் அதே சாலைக்கு டெண்டர் போட்டு 3 முறை பணப்பட்டுவாடா ஒரே ரோட்டிற்கு ஒரே காண்ட்ராக்டருக்கு கொடுக்கப்பட்டதாகவும், 6 மாதத்தில் முடிக்கவேண்டிய ரோடை 10 மாதங்களுக்கும் மேலாக முடித்தார்கள் என தெரிவித்துள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரர் இது குறித்து விஜிலென்சில் முறையிட்டதற்கு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தில் முறையிட சொன்னதின் அடிப்படையில் இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டதாக தனது வாக்கு மூலத்தினை பதிவு செய்துள்ளார். தான் புகார் செய்தவுடன் தரக்குறைவான பொருட்களை பயன்படுத்தி சாலை அமைத்துவிட்டதாகவும், அந்த சாலையும் பழுதடைந்துவிட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் தனக்கு உள்ளாட்சிகளின் முறைமன்ற நடுவத்தில் இருந்து சம்மன் வந்தவுடன் பழுதடைந்த சாலையினை ஆங்காங்கே சரி செய்துவிட்டதாக தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

இச்சாலையினை தரமற்ற பொருட்களை கொண்டு அமைத்துள்ளதாகவும் இதற்கான இழப்பீட்டினை ஈடுகட்ட நடவடிக்கை எடுக்குமாறும், இப்பணி குறித்து அதிகாரிகளிடம் பலமுறை தகவல்கள் கேட்டு மனு செய்தும் தனக்கு தகுந்த பதில் அளிக்கவில்லை என்பதால் அதிகாரிகளும், ஒப்பந்தக்காரரும் கூட்டாக சேர்ந்து தன்னுடைய கோரிக்கைக்கு பதில் அளிக்கவேண்டும் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

2014, 2015, 2016 மூன்று முறை இச்சாலை பணி மேற்கொள்ளப்பட்ட போது முறையான ஒப்பந்த புள்ளி செய்தி மலரில் வெளியீடு செய்து பொதுமக்களுக்கு அறிவிப்பு மேற்கொள்ளப்படாமல் இப்பணிகள் நடைபெற்றதாகவும், மேற்படி சாலை உரிய காலத்திற்குள் செய்யப்படாமலும், தரமற்ற சாலைகள் இடப்பட்டதாலும், பொதுமக்கள், பள்ளி மாணவர்கள், சாலைகளின் வழியே செல்லும் வாகனங்கள் 6 மாத காலத்திற்கும் மேல் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர் என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இப்பணிக்கான மேலளவுகள் எடுக்கப்படாமலும், எவ்வளவு தூரத்திற்கு பணி மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான பதில் அளிக்காமலும் அதிகாரிகள் உள்ளனர் எனவும் மேற்கூறப்பட்ட புகார்கள் சம்பந்தமாக தொடர்புடைய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பளுகல் பேரூராட்சியின் செயல் அலுவலர்களான திரு கி.எட்வின் ஜோஸ், மற்றும் திரு நீ.இராஜாமணி ஆகியோரின் நேரடி வாக்குமூலங்களை பெறும் பொருட்டு இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 1020/2016/பே/நாள் 09.02.2017, 21.03.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி விளக்கமளிக்க கோரப்பட்டது.

இம்முறைமன்ற நடுவத்தில் பளுகல் பேரூராட்சி செயல் அலுவலர் திரு கி.எட்வின் ஜோஸ் 21.03.2017 நேரில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்கு மூலம் அளித்துள்ளார்.

.... திரு அசோக் குமார் முறையீட்டு மனுதாரரின் 29.09.2016ம் தேதிய மனு குறித்து தனக்கு தெரியும் எனவும், குற்றச்சாட்டில் தெரிவித்துள்ள ராமவர்மன்சிறை–சூரங்குழி சாலை மூன்று பணிகளாக பிரிக்கப்பட்டு 14.11.2014 மற்றும் 08.02.2016 ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு 120 மற்றும் 180 நாட்களுக்குள் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டிருக்கவேண்டும் என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். 24.10.2016ல் தன்னால் விரிவாக பதில் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அதனையே தன்னுடைய வாக்குமூலமாக பதிவு செய்யவும் தெரிவித்துள்ளார். மேலும் தன்னுடைய பணிக்காலத்தில் ஒப்பந்தக்காரர் ஒப்பந்த புள்ளியில் குறிப்பிட்டிருந்த கால கெடுவுக்குள் பணி முடிக்காததால் 4 எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பியதாகவும் பணிகளை விரைந்து முடிக்குமாறும், தவறும் நிலையில் ஒப்பந்த உரிமம் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தன்னால் அறிவிப்பாணைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தான் பளுகல் பேரூராட்சியில் 2 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திரு நீ.ராஜாமணி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

...... தான் மேற்படி பளுகல் பேரூராட்சியில் 19.09.2016 முதல் 10.11.2016 முடிய இரண்டு மாதங்கள் மட்டுமே கூடுதல் பொறுப்பில் இருந்ததாகவும், 25.10.2016 ம் தேதியிட்ட தனது கடிதத்தில் திரு அசோக்குமார் என்பவரின் புகார் மனு சம்பந்தமாக விளக்க அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் திரு அசோக்குமார், திரு மணிகண்டன் ஒப்பந்தக்காரர் என்பவருக்குமிடையில் ஏற்பட்ட மன வேறுபாடு காணமாக மனுதாரர் புகார் அளித்துள்ளதாகவும், தான் பணிபுரிந்த காலத்தில் இந்த ஒப்பந்தப்பணி கால தாமதத்திற்காக திட்ட மதிப்பிட்டில் 5% சதவீத தொகை அபராதமாக விதித்து உரிய அறிவிப்பு அனுப்பி ஒப்பந்த பணிகளை முடிக்குமாறு கோரியதாகவும், பணிகள் யாவும் 23.10.2016 ல் முடிக்கப்பட்டதாகவும் தான் மேற்படி பளுகல் பேரூராட்சியில் இருந்து 10.11.2016 ல் பணி மாறுதலில் சென்று விட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். மேலும் தற்போதுள்ள செயல் அலுவலரிடம் அபராத தொகை குறித்து கேட்டதாவும் தற்போதைய செயல் அலுவலர் திட்ட மதிப்பீட்டில் 5% சதவீத அபராதத் தொகை வசூல் செய்ததாக கூறியதாகவும் சாலை மிகவும் தரமான முறையில் இருந்ததாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 1020/2016/பே/நாள்.12.07.2017 மற்றும் 10.08.2017 ஆகிய தேதிகளில் மேற்படி முறையீட்டு மனுதாரரின் புகார் மனு குறித்து பளுகல் பேரூராட்சியின் ஆவணங்கள் மற்றும் ஒப்பந்ததாரர் காலம் தாழ்த்தி, ஒப்பந்த விலை விகிதத்தின்படியே செய்துள்ள சாலைப்பணி, ஒப்பந்தக்காரரிடம் பிடித்தம் செய்யப்பட்ட அபராத தொகை ஈடு செய்த விவரங்களுடன், தனது பிரத்யேக

அறிக்கையினை சமர்ப்பிக்க கோரி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நாகர்கோவில் மண்டலம் அவர்களுக்கு அறிவிப்பாணை வழங்கப்பட்டது.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நாகர் கோவில் மண்டலம் தனது கடித எண் 4227/2017/ப.4/நாள் 09.08.2017 ன்படி தனது ஆய்வறிக்கையினை கீழ்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

பளுகல் பேரூராட்சியில் இராமவர்மன்சிறை–சூரங்குழி சாலையினை 27.07.2017 அன்று பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், பளுகல் பேரூராட்சியின் இளநிலை பொறியாளர், செயல் அலுவலர் மற்றும் பணி ஆய்வாளர் ஆகியோருடன் புகார் தெரிவிக்கப்பட்ட சாலை நேரடி தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும் அதன் விவரத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1. **கோமதி வீடு முதல் பிரசன்னன் வீடு வரை தார்தளம் அமைத்தல்.**

 இச்சாலையில் தார் தளம் அமைக்க ரூ 4.00 லட்சம் மதிப்பீடு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு இதற்கான மதிப்பீடு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக செயற்பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி 536/2014–15 நாள் 18.08.2014ல் பெறபபட்டதாக தெரிவித்துள்ளார்.

 தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்த புள்ளிகள் பேரூராட்சியில் பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு, ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திரு மணிகண்டன் என்பவருக்கு பேரூராட்சி மன்ற தீர்மான எண் 281 (5)/நாள் 14.11.2014ன்படி பணி ஆணை வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். மேற்படி ஒப்பந்தக்காரர் குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை துவங்கி முடிக்காமையால் மேற்படி நபருக்கு பேரூராட்சி செயல் அலுவலரால் 14.03.2015ல் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அறிவிப்பு அனுப்பப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தக்காரர் பணியினை 12.08.2016 க்குள் ஒப்பந்த காலத்தில் நிலவிய பொதுப்பணித்துறையின் விலை விகிதத்தின்படியே பணியினை செய்து முடிப்பதாக தெரிவித்து, மேற்படி பணி 12.01.2017 ல் முடிக்கப்பட்டதாக தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார். ஒப்பந்தக்காரர் காலதாமதமாக பணியினை முடித்தமையால் விதிக்கப்பட்ட 5% சதவீத அபராதத் தொகை ரூ 20,000/– அவரின் பணிப்பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டு செலவு சீட்டு எண் 309/நாள் 18.02.2017ன்படி பேரூராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

2. **பிரசன்னன் வீடு முதல் மணி வீடு வரை தார்தளம் அமைத்தல்.**

இப்பணிக்கு ரூ 4.00 லட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு இதற்கான மதிப்பீடு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி எண் 537/2014–15 நாள் 18.08.2014 ல் வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இப்பணிக்கான ஒப்பந்த விளம்பரம் பேரூராட்சியில் பதிவு செய்த அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திரு மணிகண்டன் என்பவருக்கு பேரூராட்சி மன்ற தீர்மான எண் 281 (6) நாள் 14.11.2014 ன் படி ஒப்புதல் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தக்காரர் குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை துவங்காமையால் பேரூராட்சி செயல் அலுவலரால் 14.03.2015 ல் பணியினை விரைந்து முடிக்க அறிவிப்பு வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி அறிவிப்பிற்கு ஒப்பந்நதக்காரர் திரு மணிகண்டன் மேற்படி பணியினை 12.08.2016 க்குள் ஒப்பந்தகாலத்தில் நிலவிய விலை விகிதத்தின்படி செய்வதாக தெரிவித்து பணியினை 12.01.2017 ல் முடித்ததாகவும், இப்பணிக்கான காலதாமதத்திற்காக விதிக்கப்பட்ட 5% சதவித அபராதத் தொகை ரூ 20,000/- பணிப்பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டு செலவு சீட்டு எண் 309/20.03.2015ல் பேரூராட்சி கசணக்கில் வரவு வைக்கப்பட்டதாக தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

3. மணி வீடு முதல் அனி வீடு வரை தார்தளம் அமைத்தல்.

இப்பணிக்கு ரூ 8.00 லட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு இப்பணிக்கான நிர்வாக அனுமதி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நாகர்கோவில் மண்டலம் அவர்களின் மூமு. எண் ட1/7436/2015/நாள் 07.01.2015 ல் வழங்கப்பட்டு இதற்கான மதிப்பீடு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளர் கடித எண் 1873/2015-16 நாள் 07.01.2015 ன் படி பெறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து இப்பணிக்கான ஒப்பந்த விளம்பரம் மாவட்ட ஒப்பந்த மலர் 16 இதழ் 17 நாள் 14.01.2016 மற்றும் தின முரசு பத்திரிக்கை நாள் 10.01.2016 ன் மூலம் வெளியிட்டபின்னர் பேரூராட்சியில் பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும் தபால் மூலம் ஒப்பந்த விளம்பரம் அனுப்பப்பட்டதாக தெரிவித்துள்ளார். பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த திரு மணிகண்டன் என்பவருக்கு பேரூராட்சி மன்ற தீர்மான எண் 5(33)/நாள் 06.02.16 ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு பணி ஆணை பேரூராட்சி செயல் அலுவலர் கடித எண் 72/2015 நாள் 02.02.2016ல் வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். ஒப்பந்தக்காரர் பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் துவங்காததால் பணியினை உடன் துவங்கி முடிக்கக் கோரி பேரூராட்சி செயல் அலுவலரால் அறிவிப்பு வழங்கப்பட்டதாக தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துளளார். இதனைத் தொடர்ந்து ஒப்பந்தக்காரர் மேற்படி பணியினை ஒப்பந்தக்கால விலைவிகிதத்தின்படியே 12.08.2016 க்குள் முடிப்பதாக தெரிவித்துள்ளதாகவும், தற்போது பணி முடிக்கப்பட்டு இப்பணிக்காக விதிக்கப்பட்ட 5% சதவித அபராதத் தொகை இப்பணிக்கான பட்டியல் தொகை வழங்கப்படும்போது பிடித்தம் செய்து பேரூராட்சி கணக்கில் வரவு வைக்கப்படும் எனவும் தனது தல ஆய்வறிக்கையில் தெரிவித்து மேற்படி மூன்று பணிகளும் ஒப்பந்த விதிகளில் குறிப்பிட்டுள்ள அளவுகளின்படி தரமாக செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாகவும் இதில் எவ்வித முறைகேடும் இல்லை என தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க கடிதம், முறையீட்டு மனுதாரர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்களின் நேரடி வாக்குமூலம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நேரடி தல ஆய்வறிக்கை ஆகியவற்றினை இம்முறைமன்ற நடுவம் பரிசீலித்து கீழ்கண்ட ஆணை வெளியிடுகிறது.

ஒரே நீளமுள்ள சாலையினை மூன்று பகுதிகளாக பிரித்து தனித்தனியாக ஒப்பந்தம் கோரிய நடைமுறை பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது அதிகார வரம்பிற்குள் மதிப்பீட்டுத் தொகைகள் வரவேண்டும் என்ற உள்நோக்கத்துடன் செயல்பட்டுள்ளது தெளிவாகிறது. பளுகல்

பேரூராட்சி பொது நிதி மூலம் ரூ 16.00 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட இச்சாலை பணியினை ஒரே ஒப்பந்தம் மூலம் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தமுறையின்படி மேற்கொண்டிருந்தால் பல்வேறு அமைப்புகள் இதில் பங்கேற்று பணியினை சீரிய முறையில் செய்திருக்கலாம். இதனை பேரூராட்சியின் செயல் அலுவலர் செய்யத் தவறியுள்ளது புலனாகிறது.

ஒரு பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கவேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிகளை ஒப்படைக்கும்போது, உடனுக்குடன் என்ன பணிகள் நடைபெற்றுள்ளன என்பதை பேரூராட்சியின் செயல் அலுவலர் கவனிக்கத் தவறியுள்ளது , ரூ 4.00 லட்சம் மதிப்பீட்டிலான பணிகள்முடிக்காமைக்கான அறிவிப்பு 14.03.2015 ல் அதாவது பணியினை முடிக்கவேண்டிய நேரத்தில் வழங்கியுள்ளது, இவர் இப்பணிகளை எந்த நிலையிலும் மேற்பார்வையிடவில்லை என்பதை தெளிவாக்குகிறது. மேலும் ஒப்பந்தக்காரர் ஒப்புக்கொண்டவாறு 20.03.2015க்குள் பணியினை முடிப்பதாக தெரிவித்த பின்னர் பணிகள் யாவும் 12.01.2017 ல்தான் முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பேரூராட்சியின் செயல் அலுவலர் என்ன நடவடிக்கை மேற்கொண்டார் என்ற விவரம் எந்த நிலைப்பாட்டிலும் இல்லை. ஒரு பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் துவங்கப்படவில்லை என்ற நிலையிலேயே ஒப்பந்தக்காரருக்கு அறிவிப்பு வழங்கியோ, அபராதம் விதித்தோ, நடவடிக்கை மேற்கொண்டிருந்தால் இவ்வளவு காலதாமதமும் ஏற்பட்டிருக்காது வீணான புகார்களும் தவிர்க்கப்பட்டிருக்கலாம். ஒப்பந்தக்காரர் தனது கடிதத்தில் தெரிவித்த தேதி கடந்த பின்னர் சுமார் 6 மாதம் கழித்த பின்னரே பணிகளை முடித்துள்ளார். இக்கால தாமதத்திற்கு எந்த செயல் அலுவலரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது மிகவும் கண்டனத்துக்குரியதாகும். மேலும், முதல் இரண்டு பணிகள் ஒப்படைக்கப்பட்ட அதே ஒப்பந்தக்காரர் மேற்படி பணிகளை முடிக்காத நிலையிலேயே மூன்றாவது பணியினையும் அதே ஒப்பந்தக்காரருக்கு வழங்கியுள்ளது ஏற்புடையதல்ல. பேரூராட்சியின் செயல் அலுவலர் இந்நேர்வில் தனது கடமைகளை சரிவர ஆற்றத் தவறியுள்ளது இவரின் செயல்பாடுகள் மூலம் தெளிவாகிறது. எனவே ஒரே சாலையினை பேரூராட்சியின் அதிகார வரம்பிற்குள் வரவேண்டும் என்ற நோக்குடன் பிரித்து ஒப்பந்த புள்ளி கோரியுள்ளது, பணி வழங்கப்பட்டபின்னர் உரிய காலத்தில் பணியினை மேற்பார்வையிட்டு பணியினை முடிக்க எந்த நடவடிக்கையும் எடுக்காதது, ஒப்பந்தக்காரர் உறுதியளித்த நிலையிலும் பணியினை முடிக்காமல் இருந்த நிலையில் இப்பணிகளை முடிக்க எவ்வித சட்டரீதியான நடவடிக்கையும் எடுக்காதது, பணிகளை ரத்து செய்து துறை மூலமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காதது, ஒப்பந்தக்கார் செலுத்தியுள்ள பிணை வைப்புத் தொகையினை பறிமுதல் செய்யத் தவறியது, ஒப்பந்தக்காரரை கருப்பு பட்டியலில் சேர்க்காதது, போன்ற செயல்களுக்கு பொறுப்பான செயல் அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என முடிவு செய்து பேரூராட்சிகளின் இயக்குநருக்கு இம்முறைமன்றம் அவ்வாறே பரிந்துரைத்து ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**/ஆணைப்படி – அனுப்பப்படுகிறது/**

**செயலாளர்.**

பெறுநர்

1. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   குறளகம், சென்னை

2. செயல் அலுவலர்,
   பளுகல் பேரூராட்சி
   கன்னியாகுமரி மாவட்டம்.

3. திரு அசோக் குமார்,
   த/பெ கிருஷ்ணன் நாயர்,
   மகம், ராமவர்மன்சிறை,
   ராம்வர்மனசிறை அஞ்சல்,
   கன்னியாகுமரி மாவட்டம் – 629 152